**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்</u>**

**<u>அ.வ.எண்.521/2023</u>**

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் நாள் வெள்ளிகிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | சித்ரா | தொழில் |
| க/பெ | தணிக்காசலம் | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. கா.சா.எண். 165 காலையில் நான் எந்த பூமியையும் கிரயம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல கிரயம் பெற்றுள்ளேன். 2011 ஆம் வருடம் நான் கிரையம் பெற்றேன். 165 காலையில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றேன் என்றால் எனக்கு நினைவில்லை. நான் எட்டு ஏக்கர் நிலம் கிரையம் பெற்றேன். எந்தெந்த காலையில் எவ்வளவு ஏக்கர் நிலம் கிரயம் பெற்றேன் என்றால் எனக்கு எண்கள் நினைவில்லை. நான் எந்தெந்த காலையில் எவ்வளவு விஸ்தீரணம் நிலம் அனுபவம் செய்து வருகிறேன் என்று சொன்னால் எனக்கு நம்பர் தெரியாது. நான் எந்த பூமியிலும் அனுபவத்தில் இல்லாததால் தான் நான் பரப்பு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஆவணத்தில் கண்டுள்ள பூமிகளின் சர்வே எண் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

2. வா.சா.ஆ.7-ல் காசா எண் 165-ல் பூமி கிரயம் பெற்றதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் இதுனால் வரையில் குடியிருக்க வில்லை என்றால் சரிதான். நான் ஏக்கர் என்ன விலை என்று கிரையம் பேசினேன் என்றால் அவ்வாறு கிரயம் பேசவில்லை மொத்தமாக கிரையம் பேசினேன். கிரைய தொகையை வங்கி மூலமாக எடுத்து கிரையம்

செய்தேன். கிரையம் செய்த தேதிக்கு முதல் நாள் பணத்தை எடுத்து கிரையத் தேதியில் கொடுத்தேன். கிரையத்தேதிக்கு முந்தைய நாள் 4 லட்சம் வங்கியில் இருந்து எடுத்தேன். ஒட்டன்சத்திரம் கனரா வங்கியில் எனக்கு கணக்கு உள்ளது அதனுடைய கணக்கு எண் பார்த்தால் தான் தெரியும். அந்த வங்கி கணக்கில் இருந்து நான் பணம் எடுத்தேன். பிரதிவாதிக்கு ரூபாய் 3 லட்சத்து 30 ஆயிரம் பணமாக கொடுத்தேன். வங்கியில் இருந்து ரூபாய் 4,00,000 கிரயத்திற்கு முதல் நாள் எடுத்ததாக சொல்வதும் பிரதிவாதிக்கு ரூபாய் மூன்று லட்சம் முப்பதாயிரம் பணமாக கொடுத்ததாக கூறுவதும் பொய் என்று சொன்னால் சரியல்ல.

3. என்னுடைய அம்மாவின் அப்பா பெயர் காளியப்பகவுண்டர் என்றால் சரிதான். காளியப்பகவுண்டருக்கு ஒரு மகன் இரண்டு மகன்கள் வாரிசு என்றால் சரிதான். காளியப்பகவுண்டரின் மகன் பெயர் ரத்தினசாமி என்றாலும் என்னுடைய தாயார் பெயர் முத்துலட்சுமி என்றாலும் அவரது சகோதரி பெயர் செல்லாத்தாள் என்றாலும் சரிதான். 1—ம் பிரதிவாதி பழனிசாமி கவுண்டர் என்னுடைய தாயாரின் உடன் பிறந்த சகோதரி செல்லாத்தாளின் கணவர் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் 1—ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரிதான். பழனிசாமி கவுண்டர் மற்றும் செல்லாத்தாளுக்கு இரண்டு மகன்கள் என்றாலும் அவர்களது பெயர்கள் ராமசாமி மற்றும் சுப்பிரமணி என்றால் சரிதான்.

**1—ம் பிரதிவாதி தரப்பில் காலஅவகாசம் கோரப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.09.13 11:37:04 +0530

3—ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.